**ஏப்ரல் – 02**

# சர்வதேசச் செய்திகள்

## Heart of Asia மாநாட்டின் 9வது அமைச்சர்கள் மாநாடு

- சமீபத்தில் ஆப்கானிஸ்தான் தொடர்பான 'ஆசியாவின் இதயம் – இஸ்தான்புல் நடைமுறையின்' 9வது அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் அவர்கள் தஜகிஸ்தானின் தலைநகரைச் சென்றடைந்தார்.
- இந்த மாநாடு இஸ்தான்புல் நடைமுறையின் ஒரு அங்கமாகும்.
- இந்த மாநாடு துசான்பே நகரத்தில் நடத்தப் பட்டது.

## 2020 ஆம் ஆண்டு மனித உரிமைகள் அறிக்கை

- இந்த அறிக்கை அமெரிக்காவின் உள்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது நாடுவாரியாக மனித உரிமைகளின் நிலையைப் பற்றிய விவாதங்களைக் கொண்டுள்ளது.
- இது ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் (Congress) சமர்ப்பிக்கப் படுகின்றது.

*முக்கியமான விபரங்கள்*

- கருத்துச் சுதந்திரத்தை அரசு வெகுவாக ஆதரித்தாலும், தங்களது கருத்து அறிக்கைகளிலும் சமூக ஊடகங்களிலும் இந்திய அரசினை விமர்சிக்கும் பத்திரிக்கையாளர்கள் தொடர்ந்து துன்புறுத்தப் படுவதும் அவர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதும் தொடர்கிறது.
- இணையதள நிறுவனங்களிடமிருந்துப் பயனாளிகளின் தரவுகளைப் பெறுவதற்கான அரசின் கோரிக்கைகள் வியக்கத்தக்க அளவில் அதிகரித்துள்ளன.
- அரசானது 2019 ஆம் ஆண்டில் பேஸ்புக்கிடமிருந்து 49,382 தரவுகளைப் பெறுவதற்கான கோரிக்கைகளை விடுத்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டிலிருந்து 32% அதிகமாகும்.
- அதே காலகட்டத்தில் அரசின் கோரிக்கை கூகுளிடம் 69%மும், டிவிட்டரிடம் 68%மும் அதிகரித்துள்ளது.

## வஜ்ர பிரகார் 2021

- சமீபத்தில் இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சிறப்புப் படைகள் 'வஜ்ர பிரகார் 2021' எனும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொண்டன.
- இப்பயிற்சி இமாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்றது.
- இணைந்து திட்டமிடுதல் மற்றும் செயல்பாட்டு உத்திகள் போன்ற துறைகளில் சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இரு நாடுகளின் சிறப்புப் படைகளின் இயங்குதிறனை மேம்படுத்துதல் போன்றவை இப்பயிற்சியின் நோக்கங்களாகும்.
- இரு நாடுகளின் சிறப்புப் படைகளின் இந்தக் கூட்டுப் பயிற்சியானது ஒருமுறை இந்தியா என்ற முறையிலும் மற்றொரு முறை ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற முறையிலும் மேற்கொள்ளப் படும்.

- சிறப்புப் படைகள் என்பது ரகசியமான, தீவிரவாத எதிர்ப்பு மற்றும் மற்ற பிற சிறப்புச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு நாட்டின் ஆயுதப் படைகளாகும்.
- இமாச்சலப் பிரதேசத்திலுள்ள பக்லோவில் அமைந்துள்ள சிறப்புப் படைகள் பயிற்சிப் பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயிற்சி 11வது கூட்டுப் பயிற்சியாகும்.
- 10வது வஜ்ர பிரகார் பயிற்சி 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள சியாட்டிலில் நடத்தப் பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மகேந்திரகிரி உயிர்க்கோளக் காப்பகம்

- ஒடிசா அரசு, அந்த மாநிலத்தின் தெற்குப் பகுதியிலுள்ள மகேந்திரகிரியில் அம்மாநிலத்தின் இரண்டாவது உயிர்க் கோளக் காப்பகத்தை அமைப்பதற்காக முன்மொழிந்துள்ளது.
- சிம்லிபால் உயிர்க்கோளக் காப்பகமானது ஒடிசாவின் முதல் உயிர்க்கோளக் காப்பகம் ஆகும்.
- அது 1996 ஆம் ஆண்டில் உயிர்க்கோளக் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.
- அறிவிக்கப்பட உள்ள இந்த மகேந்திரகிரி உயிர்க்கோளக் காப்பகம் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்த கஜபதி மற்றும் கஞ்சம் மாவட்டங்களை உள்ளிட்ட பகுதி வரை பரவியுள்ளது.
- மகேந்திரகிரி மலையின் சூழலியலமைவு தென் இந்தியா மற்றும் இமயமலையின் தாவரம் மற்றும் விலங்கினங்களுக்கு இடைப்பட்ட ஓர் இடைநிலைப் பகுதியாக உள்ளது.
- மகேந்திரகிரியில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழுவைச் சேர்ந்த (PVTG - particularly vulnerable tribal group) சௌரா இனத்தவர் மற்றும் காந்தா இனத்தவர் போன்ற பழங்குடியினர் வசிக்கின்றனர்.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் படி (IUCN), ஒடிசாவிலுள்ள அச்சுறுத்தல் நிலையில் உள்ள மருத்துவக் குணம் கொண்ட தாவரங்களின் 41 இனங்களில் 29 இனங்கள் அந்த உயிர்க் கோளக் காப்பகப் பகுதியில் காணப்படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## சிறைச்சாலை வானொலித் திட்டம்

- "டின்கா டின்கா" என்ற அறக்கட்டளையானது மாநில அரசுடன் இணைந்து ஹரியானா சிறைச்சாலைகளில் "சிறைச்சாலை வானொலி" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
- சிறைச்சாலை வானொலி என்பது கைதிகளால் சிறைச்சாலைக்கு உள்ளேயே இயக்கப் பட்டு நடத்தப் படுகின்ற ஒரு வானொலியாகும்.
- வளாகத்திற்குள்ளேயே உள்ள காட்சிப்படக் கூடத்திலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் கைதிகள் தங்கியிருக்கும் அறைகளிலுள்ள ஒலிப்பெருக்கிகள் மூலம் அவர்களைச் சென்றடையும்.
- கைதிகளின் படைப்பாற்றலை வெளிக் கொணர்வதும், அர்த்தமுள்ள வகையில் ஓர் ஈடுபாட்டினை அவர்களுக்கு வழங்குவதும் இதன் நோக்கமாகும்.



## வாழைப்பழ திருவிழா - குஷிநகர்

- உத்தரப் பிரதேச அரசு குஷிநகரில் "வாழைப்பழ திருவிழாவினை" ஏற்பாடு செய்து உள்ளது.
- இதில் குறைந்தது 35 விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்கள் பங்கேற்றனர்.
- பாரம்பரிய நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக அம்மாநில அரசு 2018 ஆம் ஆண்டில் "ஒரு மாவட்டம் ஒரு உற்பத்திப் பொருள்" (One District One Product - ODOP) எனும் திட்டத்தை உருவாக்கியது.
- குஷிநகரில், வாழை மர இழைகளிலிருந்து (banana fibres) தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருட்கள் ODOP திட்டத்தினால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இதன் பிறகு குறைந்தபட்சம் 4,000 விவசாயிகள் வாழைச் சாகுபடியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

## அஷ்பக் உல்லா கான் விலங்கியல் பூங்கா

- சமீபத்தில், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் கோரக்பூரில் சாகித் அஷ்பக் உல்லா கான் விலங்கியல் பூங்காவினைத் திறந்து வைத்தார்.
- இது பூர்வாஞ்சலில் அமைந்த முதலாவது மற்றும் அந்த மாநிலத்தின் மூன்றாவது விலங்கியல் பூங்காவாகும்.
- இந்தப் பூங்காவிற்கு சுதந்திரப் போராட்ட வீரரான சாகித் அஷ்பக் உல்லா கானின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## ஆற்றல் திறன்மிகு நகரங்கள்

- இரண்டு பசுமை ஆற்றல் திறன்மிகு நகரங்களைக் கொண்ட முதல் இந்திய மாநிலமாக பீகார் மாற உள்ளது.
- அந்த இரு நகரங்கள் ராஜ்கிர் மற்றும் புத்த கயா ஆகும்.
- இவை 2023 ஆம் ஆண்டிலிருந்து ஆற்றல் திட்டம் மூலம் சூரிய ஆற்றலைப் பெறும்.
- இந்த நகரங்களை இயக்குவதற்கான ஆற்றலானது இந்திய சூரிய ஆற்றல் கழகத்தினால் (Solar Energy Corporation of India - SECI) உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப் படும்.

- இத்திட்டத்தை அமல்படுத்துவதற்காக பீகார் மாநில அரசு, லக்கிசராய் மற்றும் பாகல்பூர் ஆகிய இடங்களில் 500 மெகாவாட் திறனுடைய சூரிய ஆற்றல் நிலையங்களை அமைக்க உள்ளது.


***SECI***

- இது சூரிய ஆற்றல் துறைக்காகவே என்று பிரத்தியேகமாகச் செயல்படும் ஒரே மத்திய பொதுத் துறை நிறுவனம் (CPSU) ஆகும்.
- இது புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது.
- இக்கழகம் தேசிய சூரிய ஆற்றல் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் 2011 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.
- இத்திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய ஆற்றல் திட்டம் எனவும் அழைக்கப் படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சரஸ்வதி சம்மான் 2020

- புகழ்பெற்ற மராத்திய எழுத்தாளர் டாக்டர் சரண்குமார் லிம்பாலே 2020 ஆம் ஆண்டிற்கான சரஸ்வதி சம்மான் என்ற விருதினைப் பெற உள்ளார்.
- இந்த விருது அவருடைய "Sanatan" எனும் புத்தகத்திற்காக வழங்கப்பட உள்ளது.
- இந்த விருது ரூ.15 லட்ச ரூபாய் பரிசு, ஒரு சான்றிதழ், கவுரவ மாலை (Plaque) ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்த விருது நாட்டின் மிகவும் மதிப்பு மிக்க மற்றும் உயரிய இலக்கிய விருதாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு விருதாகும்.
- இது 1991 ஆம் ஆண்டில் KK பிர்லா அறக்கட்டளையால் தொடங்கப்பட்டதாகும்.
- டாக்டர் லிம்பாலேவின் "Sanatan" புத்தகம் 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- "Sanatan" பட்டியல் இனத்தவர்களின் போராட்டங்கள் குறித்த ஒரு முக்கிய சமூக மற்றும் வரலாற்று ஆவணமாகும்.





# முக்கிய தினங்கள்


## காந்தியின் கட்டாக் வருகையின் 100வது வருடம்

- ஒடிசா மாநிலத்திற்கு மகாத்மா காந்தி முதன்முதலாக வருகை தந்த 100வது ஆண்டு நிறைவினை ஒடிசா அரசு கொண்டாடுகிறது (மார்ச் 23).
- இவ்விழாவில் 'காந்தியின் ஒடிசா வருகையின் 100வது வருடம்' குறித்து இணைய வழியில் ஒரு நினைவு தபால் தலையினை மத்திய அமைச்சர் சஞ்சய் தோத்ரே வெளியிட்டார்.
- மகாத்மா காந்தி 1921 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று ஒடிசா மாநிலத்திற்கு வருகை தந்த போது இங்கு தங்கியிருந்தார்.

# இதரச் செய்திகள்

## "Names of the women" புத்தகம்

- "Names of the women" எனும் புத்தகம் ஜீத் தாயில் என்பவரால் எழுதப் பட்டது.
- இப்புத்தகம் சமயப் போதனைகளில் ஒடுக்கப்பட்ட, குறைக்கப்பட்ட (அ) மறைக்கப் பட்ட பெண்களின் பங்கு பற்றி கூறுகிறது.
- ஜீத் தாயில் "Narcopolis" எனும் புத்தகத்திற்கு மிகவும் பிரபலமான ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார்.
- இவரது "Narcopolis" புத்தகம் 2012 ஆம் ஆண்டு மேன்புக்கர் பரிசிற்கு பரிந்துரைக்கப் பட்டது. மேலும் தெற்காசிய இலக்கியத்திற்கான DSC பரிசினை இப்புத்தகம் வென்று உள்ளது.
- இவரது சமீபத்திய புத்தகமான "Low", 2020 ஆம் ஆண்டில் வெளியானது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★